# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்: 172/2016

ஆணை எண்: 07/2016

நாள்: 01/03/2016

திரு. பொ. சேகர் கண்ணபிரான்,
வருவாய் அலுவலர் (ஓய்வு),
எண். 8, டூவிபுரம் 9ம் தெரு,
தூத்துக்குடி – 628 003. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கோவில்பட்டி நகராட்சி,
கோவில்பட்டி. – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி நகராட்சி, 8, டூவிபுரம், 9ம் தெருவில் வசிக்கும் ஓய்வுபெற்ற வருவாய் அலுவலர் திரு. பொ. சேகர் கண்ணபிரான் அவர்கள், இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ள முறையீட்டு மனு, 31.07.2015 அன்று பெறப்பட்டு, 172/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

## ஆணை

தூத்துக்குடி நகராட்சி, டூவிபுரம், 9ம் தெருவில் வசிக்கும் திரு. பொ. சேகர் கண்ணபிரான் அவர்கள், கோவில்பட்டி நகராட்சியில் வருவாய் அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். முறையீட்டுதாரர் திரு. பொ. சேகர் கண்ணபிரான் அவர்கள் தான் 30.04.2015 அன்று பணியிலிருந்து ஓய்வு பெறும்பொழுது, இறப்பு (ம) ஓய்வுகாலப் பணிக்கொடை ரூபாய். 1,83,985/–ல் ரூ.18,398/–ஐ நிறுத்தம் செய்து, மீதிக் தொகை

ரூ.1,65,587/– மட்டும் 23.12.2005ல் வழங்கப்பட்டது என்றும் நிறுத்தி வைத்த தொகை ரூ.18,398/–ஐ சுமார் 10 ஆண்டுகள் ஆகியும் தனக்கு வழங்கப்படவில்லை என்று இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்தார்.

2. மேற்படி மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. மாதங்கள் ஆறு கடந்த நிலையிலும் கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடமிருந்து எந்தவித அறிக்கையும் வரப்பெறாததால் 3.3.2016 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்நிலையில் 16.2.2016 நாளிட்ட கடிதத்தில், முறையீட்டுதாரரிடமிருந்து பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூ.18,398/– காசோலை மூலம் முறையீட்டுதாரருக்கு 16.11.2015 அன்று வழங்கப்பட்டுவிட்டது என்று கோவில்பட்டி நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். 16.11.2015 நாளிட்ட கடிதம் மூலம் முறையீட்டுதாரருக்கு நிறுத்தி வைத்த தொகை வழங்கப்பட்டுள்ளது. எனினும் முறையீட்டுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது குறித்து, இம்முறைமன்ற நடுவத்திற்கு கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடமிருந்து எந்தவித அறிக்கையும் அறிவிக்கப்படவில்லை. விசாரணைக்கு அழைப்பாணை வழங்கிய பின்பே 16.2.2016 நாளிட்ட கடிதத்தில் முறையீட்டுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது குறித்து தெரிவித்துள்ளார். காலம் தாழ்த்தி அறிக்கை அனுப்பிய கோவில்பட்டி நகராட்சி அணையரின் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது. இனிவரும் காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்பட்டால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்றம் தெரிவிக்கிறது. முறையீட்டுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதால், இந்நேர்வின் மீதான நடவடிக்கையை முடித்து வைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

––//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ரு. பழனிவேல்

**உதவி பதிவாளர்.**

பெறுநர்:

திரு. பொ. சேகர் கண்ணபிரான்,
வருவாய் அலுவலர் (ஓய்வு),
எண். 8, டுவிபுரம் 9ம் தெரு,
**தூத்துக்குடி – 628 003.**

நகல்

நகராட்சி ஆணையர்,
கோவில்பட்டி நகராட்சி,
கோவில்பட்டி.